**செய்தி வெளியீடு எண்: 612** **நாள் : 03.12.2014**

# <u>பத்திரிகைச்செய்தி</u>

தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6 அவர்களிடமிருந்து 652 கணினி பயிற்றுநர் பணிக்காலியிடங்களுக்கான காலியிட அறிவிக்கை பெறப்பட்டது. இப்பணிக்காலியிடங்கள் மாநில அளவில் அமைந்த 20/10/2014 அன்றைய நிலவரப்படி தகுதியுள்ள வேலைவாய்ப்பக பதிவுதாரர்களின் பெயர், பதிவுமூப்பு விவரங்கள், இனவாரியாக தமிழக அரசின் இணைய தளமான www.tn.gov.in/employment-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவ்விணைய தளத்தில் மேற்கூறிய பணியிடங்களுக்கான கல்வித்தகுதி, வயதுவரம்பு, இனசுழற்சி விவரங்கள் ஆகியவற்றையும் காணலாம். மேற்படி இணைய தளத்தில் மனுதாரர்கள் தங்களது பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பரிந்துரை பதிவுமூப்பு தேதிக்குள் தகுதியான மனுதாரர்கள் எவரும் விடுபட்டிருப்பின் அவர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை உரிய ஆதாரத்துடன் 10/12/2014 தேதிக்குள் நேரில் தொடர்பு கொள்ளுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**